தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1980 ஜூலை 15.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது,

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு".

செய்யத் தொடங்கும் ஒரு செயலை முன்னதாகவே நன்றாக ஆராய்ந்து, பிறகு அதைச் செய்யத் தொடங்க வேண்டும். செய்யத் தொடங்கிய பிறகு அதன் முடிவை எண்ணிப் பார்க்கலாம் என்பது தவறு,

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 2— திரு. என். பழனிவேல்.

திரு. என். எஸ். வி. சித்தன் : குறுகிய கால வினா உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவை முடிந்தவுடன் அது எடுத்துக் கொள்ளப் பெறும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, குறுகிய கால வினாக்கள் இருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: இதுவரைக்கும் குறுகிய கால வினாதான் முதலில் எடுத்துக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவரைக்கும் உடுக்குறியிட்ட வினாக்கள் வரவில்லை, விதிகளில். வினாப் பட்டியலில் கண்டுள்ள வாய்மொழி விடைகளுக்கான வினாக்கள் முடிந்தவுடன், குறுகிய கால வினாக்கள் எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் என்றிருக்கிறது. எனவே இன்று முதலில்—வினாப்பட்டியலில் இருக்கும் உடுக்குறியிட்ட வினாக்கள் எடுத்துக் கொள்ளப்பெறும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நாங்கள் பழைய ஞாபகத்தில் சொன்னோம்.